எனது இல : சிபாதி 3/5/2/-1 சுற்றறிக்கை இல 13/2017

சிவில் பாதுகாப்புத் திணைக்களம்,

பம்பலப்பிட்டி.

2017.07.04

மேலதிகபணிப்பாளர் நாயகம்,
சகல பணிப்பாளர்கள் / பிரதிப் பணிப்பாளர்கள் / உதவிப் பணிப்பாளர்கள்,
தலைமையக கட்டளையிடும் அதிகாரி,
சகல படைப்பிரிவுகளுக்கும் பொறுப்பான கட்டளையிடும் அதிகாரிகள்,
பயிற்சிப் பாடசாலைகளின் கட்டளையிடும் அதிகாரிகள்,
மற்றும் கருத்திட்டங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள்.

**வலுச்சக்தியைப் பேணிப் பாதுகாத்தல் மற்றும் வினைத்திறனாக பயன்படுத்துதல் பற்றிய தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

மின்சாரத்தை மிகவும் சிக்கனமாக மற்றும் வினைத்திறனுள்ள விதத்தில் பயன்படுத்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு, மின்சாரத்தை அதிகமாகப் பயன்படுத்தப்படும் இடங்கள் மற்றும் உபகரணங்களை தனித்தனியாக அடையாளம் கண்டு மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி அமைச்சினால் 2017.02.09 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள இல 2017/02 எனும் சுற்றறிக்கையின் பிரகாரம் தாங்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்துடன் இசைந்தொழுக வேண்டுமென்பதோடு, மேற்படி விடயம் தொடர்பாக சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் பின்வரும் நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டுமென அறியத்தருகின்றேன்.

- திணைக்கள தலைமையகத்தின் மாதாந்த மின்சாரப் பட்டியல் ரூ. 8 - 10 இலட்சம் அளவில் உள்ளது. ஏனைய படைப் பிரிவு நிலையங்கள் மற்றும் பயிற்சி பாடசாலைகளில் மின்சாரப் பாவனை கூடிய பெறுமானத்தில் காணப்படுகின்றது. இவ்வாறு அதிக பெறுமானத்தைக் கொண்டிருப்பதற்கான காரணம் குளிரூட்டிகளின் பயன்பாடாகும். இந்த உபகரணங்களை வினைத்திறனுடன் செயற்படுத்தும் பொருட்டு தேவையான பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் திணைக்களத்தின் பராமரிப்புப் பிரிவினால் துரிதமாக செய்ய வேண்டியுள்ளதுடன் உபகரணங்களை வினைத்திறனுடன் பயன்படுத்துவது தொடர்பாக பிரிவுத் தலைவர்கள் பொறுப்புக்கூறுதல் வேண்டும்.
- இதன் பொருட்டு அலுவலக வளாகத்தில் குளிரூட்டி இயந்திரங்கள் இயக்கப்படும் காலப் பிரிவை மட்டுப்படுத்துவதற்காக காலை 08.30 மணிக்குப் பின்னர் குளிரூட்டிகளை இயக்குதல், அலுவலக நேரம் முடிவடைவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்னர் குளிரூட்டிகளை நிறுத்துதல் மற்றும் உத்தியோகபூர்வ அறைகளைப் பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் அலுவலக நேரத்தில் வெளியே இருக்கும் சந்தர்ப்பத்தில் குளிரூட்டிகளை நிறுத்தி வைத்தல் வேண்டும்.
- அவ்வாறே அறையின் வெப்பம் 26 பாகை சென்றிகிரேட் அளவில் பேணுதல், குளிரூட்டிகளின் வெப்பத்தை குறைந்த அளவில் பயன்படுத்துவதை தவிர்த்தல், சூரிய ஒளி படும் அலுவலக சூழலுக்கு பொருத்தமான வெள்ளை நிறத் திரைச் சீலைகளைப் பயன்படுத்துதல் மற்றும் சூழல் வெப்பநிலை குறைந்த அளவில் இருக்கும் போது கதவு யன்னல்களை திறந்து அறைகளின் வெப்பநிலையை தேவையான படி பேணுதல் வேண்டும்.
- மின் அடுப்பு பாவனையை குறைத்தல் மற்றும் நீரை வெப்பமேற்றுவதற்கு மின்சாரக் கேத்தல் / ஹீற்றர் என்பவற்றுக்குப் பதிலாக எரிவாயு அடுப்புகளைப் பயன்படுத்துமாறு அத்தகைய உபகரணங்களைப் பயன்படுத்துபவர்களுக்கு அறிவுரை வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- திணைக்கள உத்தியோகத்தர்களின் விடுதிகளில் குளிரூட்டிகளின் பாவனை அதிக பெறுமானத்தைக் கொண்டுள்ளது. எனவே அதனைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

04. அவ்வாறே சகல அரசாங்க நிறுவனங்களும் தமது நிறுவனத்தின் குளிரூட்டிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் வினைத்திறன் தொடர்பாக வலுச்சக்தி கணக்காய்வொன்றை மேற்கொண்டு அதற்காக செலவாகும் மின்சாரத்தை குறைத்து கடந்த 06 மாத காலத்திற்குள் நிறுவனத்தின் சாதாரண மின்சாரப் பாவனைக்கு ஏற்ப எதிர்வரும் ஒவ்வொரு மாதத்திலும் மின்சாரப் பாவனையைக் குறைத்தல் தொடர்பான முன்னேற்றத்தை வலுச்சக்தி செயலகத்திற்கு அறிக்கையிட வேண்டியிருப்பதனால் இந்த விடயம் தொடர்பாக தங்களது கவனத்தைச் செலுத்துமாறு மேலும் அறியத்தருகின்றேன்.

**சந்திரரத்ன பல்லேகம**

**பணிப்பாளர் நாயகம்**